StudentBounty.com

# INTERNATIONAL INDIAN SCHOOL - DAMMAM

**SUMMATIVE ASSESSMENT - I ( 2012-2013 )**

Time : 3 hours — **Tamil** — Marks : 90

நேரம் - 3 மணி — **தமிழ்** — மதிப்பெண்கள் - 90

**Class : VI** — பகுதி - 1 — **ஆறாம் வகுப்பு**

**அ ) கொடுக்கப்பட்டுள்ள பத்தியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

ஒவ்வோர் ஆண்டும் தை மாதம் முதல் நாள் பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது. இவ்விழா தமிழ்நாட்டிற்கே உரிய தனிவிழா. சூரியன் தென்கிழக்கில் உதிப்பதிலிருந்து வடகிழக்கிலிருந்து உதிக்க திசை திரும்பும் காலமே இப்பொங்கல் விழா எடுக்கும் காலம். பொங்கல் விழா கொண்டாடும் தை மாதம், மழை பொழிந்து பூவும், பிஞ்சும், காயும், கனியும் குலுங்கும் காலம்.பனிக்காலத்திற்கும், வேனிற்காலத்திற்கும் இடைப்பட்டக் காலம். நெல்லும், கரும்பும், மஞ்சளும், இஞ்சியும் விளைந்து வீடு வந்து சேரும் காலம். உழைத்த மக்கள் ஓய்வு பெறும் காலம். உழைப்பின் பயனைக் கண்டு மகிழ்ச்சி பெறும் காலமும் ஆகும். இத்தகைய மகிழ்ச்சி தரும் தைத்திருநாளாம் பொங்கல் பெருநாள் தமிழ் நாட்டில் மட்டுமே கொண்டாடப்படுவதால் தமிழர் திருநாள் என அழைக்கப்படுகிறது.

<u>வினாக்கள்</u> **10**

1. பொங்கல் எப்பொழுது கொண்டாடப்படுகிறது ?
2. தை மாதம் விளைந்து வீடு வந்து சேரும் விளைபொருட்களைக் கூறு.
3. தை மாதம் உழைக்கும் மக்களுக்கு எவ்வகையான காலமாக விளங்குகின்றது ?
4. பொங்கல் விழா எடுக்கும் காலம் எது ?
5. பொங்கல் விழா தமிழர் திருநாள் என அழைக்கப்படக் காரணம் என்ன ?

**ஆ ) பின்வரும் தலைப்புகளில் ஏதேனும் ஒன்றினைப் பற்றிக் கட்டுரை எழுதுக.** **10**

1. எனக்குப் பிடித்தமான பறவை - மயில்
2. எனக்குப் பிடித்தமான விலங்கு - முயல்

**இ ) கடிதம் எழுதுக,** **10**

1. உடல்நலமின்மையால் பள்ளிக்கு வர இயலாமை குறித்து வகுப்பு ஆசிரியருக்கு விடுப்பு விண்ணப்பக் கடிதம் எழுதுக.

## பகுதி - 2

**அ ) பொருத்தமான சான்றினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

1. உயிர்மெய் எழுத்துகள் மட்டுமே இடம் பெறும் சொல்
   அ) செந்தமிழ்   ஆ) பைங்கிளி   இ) தேனடை   ஈ) நீள்வயல்
2. வினைச்சொல்
   அ) ஓடினாள்   ஆ) கண்ணகி   இ) மாங்கனி   ஈ) மைதானம்
3. பெண்பால்
   அ) தந்தை   ஆ) மாமன்   இ) தங்கை   ஈ) தலைவன்



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

ஆ ) **பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து நிரப்புக.**

4 . தென்னை - என்பது ____________________.

அ) மூன்றெழுத்துச்சொல் ஆ) இடைச்சொல் இ) உரிச்சொல் ஈ) நான்கெழுத்துச்சொல்

5 . அஃறிணையில் ஒருமைக்குரிய பால் ____________________.

அ) ஆண்பால் ஆ) பலவின்பால் இ) ஒன்றன்பால் ஈ) பலர்பால்

6 . பேசுவோன் முன் நின்று கேட்பவர்களைக் குறித்துக் கூறுவது ________________.

அ) தன்மை ஆ) முன்னிலை இ) படர்க்கை ஈ) பன்மை

இ ) **அடைப்புக்குறிக்குள் கூறியவாறு பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

7 . அழகன் ( பெண்பாலாக்குக )

அ) அழகிய வேலன் ஆ) அழகிய மயில் இ) அன்பழகன் ஈ) அழகி

8 . கடைக்குப் போனேன் ( இடைச்சொல்லை எடுத்து எழுதுக )

அ) ஐ ஆ) ஆல் இ) கு ஈ) இன்

9 . தாமரை மலர் அழகானது . ( உயிர்மெய் நெடில் எழுத்துகளை எடுத்து எழுதுக )

அ) தா, கா, ன ஆ) தா, ம, ல இ) தா, ரை, கா ஈ) தா, கா, து

இ ) **பொருத்தமான இலக்கணக்குறிப்பினைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

10 . வேந்தன்

அ) உயர்திணை ஆ) அஃறிணை இ) ஒன்றன்பால் ஈ) பலவின்பால்

11 . உறுமீன்

அ) பெயர்ச்சொல் ஆ) வினைச்சொல் இ) இடைச்சொல் ஈ) உரிச்சொல்

12 . அம்மா

அ) உயிர்மெய் எழுத்து சொல்லின் இறுதியில் இடம்பெற்றுள்ள சொல்.
ஆ) உயிர்மெய் எழுத்து சொல்லின் முதலில் இடம்பெற்றுள்ள சொல்.
இ) உயிர்மெய் எழுத்து சொல்லின் இடையில் இடம்பெற்றுள்ள சொல்.
ஈ) உயிர்மெய் எழுத்து இடம்பெறாத சொல்.

ஈ ) **சரியான வாக்கியத்தைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **3**

13 . அ) தனிநிலை என அழைக்கப்படுவது ஆய்த எழுத்து ஆகும்.
ஆ) தனிநிலை என அழைக்கப்படுவது மெய்யெழுத்து ஆகும்.
இ) தனிநிலை என அழைக்கப்படுவது உயிர் எழுத்து ஆகும்.
ஈ) தனிநிலை என அழைக்கப்படுவது உயிர்மெய் எழுத்து ஆகும்.

14 . அ) திணை என்னும் சொல்லுக்கு பகுப்பு என்று பொருள்.
ஆ) திணை என்னும் சொல்லுக்கு ஒழுக்கம் என்று பொருள்.
இ) திணை என்னும் சொல்லுக்கு எண்ணிக்கை என்று பொருள்.
ஈ) திணை என்னும் சொல்லுக்கு பிரிவு என்று பொருள்.



www.StudentBounty.com
Homework Help & Pastpapers

15 . அ) பெயரையும் , வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் இடைச்சொல் ஆகும்.
ஆ) பெயரையும் , வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் பெயர்ச்சொல் ஆகும்.
இ) பெயரையும் , வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் வினைச்சொல் ஆகும்.
ஈ) பெயரையும் , வினையையும் இடமாகக் கொண்டு வரும் சொல் உரிச்சொல் ஆகும்.

## பகுதி - 3

**அ ) பொருள் தருக.** **3**

1 . வாடை 2 . இடும்பை 3 . காவாக்கால்

**ஆ ) பிரித்து எழுதுக.** **3**

1 . தீயொழுக்கம் 2 . கற்கண்டு 3 . செங்காந்தள்

**இ ) சேர்த்து எழுதுக.** **3**

1 . நன்று + அன்று 2 . கருமை + மேகம் 3 . முசுண்டை + கொடி

**ஈ ) எதிர்ச்சொற்களை இட்டுத் தொடரை நிறைவு செய்க.** **2**

1 . சிறந்த பண்புகளைப் புகழ்ந்து பேச வேண்டும். ஆனால், எவரையும் ______________ பேசக்கூடாது.

2 . அனைவரும் ஒற்றுமையுடன் வாழ வேண்டும்; ___________ பாராட்டக் கூடாது.

**உ ) வருணித்து எழுதுக.** **2**

1 . யானை ( அல்லது ) 2 . வண்ணத்துப் பூச்சி

**ஊ ) தொடர் அமைத்து எழுதுக.** **2**

1 . வெள்ளம் 2 . கார்காலம்

## பகுதி - 4

**அ ) கொடுக்கப்பட்டுள்ள உரைநடைப்பகுதியைப் படித்துக் கேட்கப்பட்டுள்ள பல்விடை வினாக்களுக்கு விடை தருக.**

அந்தி சாயும் நேரம், மென்மையான சாயலை உடைய மகளிர், தம் கைகளில் சங்கு வளையல்களை அணிந்திருந்தனர். அவர்கள் மூங்கில் போன்ற அழகிய தோள்களையும், முத்துப் போன்ற பற்களையும் பெற்றிருந்தனர். கண்களுக்குத் தகுந்த அழகிய மையைத் தீட்டி அழகுபடுத்தியிருந்தனர். செவிகளில் குண்டலங்களை அணிந்திருந்தனர். கார்காலம் ஆதலின், இரவு பகல் எது எனத் தெரியாது தவித்தனர். பூத்தட்டில் வைத்திருந்த பிச்சி அரும்புகள் மலர்ந்து மணம் வீசின. அம்மலர்கள் மலர்ந்ததைக் கண்டு மாலைப்பொழுது வந்ததை அறிந்தனர். தம் கூந்தலில் மல்லிகை, முல்லை மலர்களைச் சூடினர். இல்லங்கள் தோறும் விளக்குகளை ஏற்றினர். நெல்லையும், மலரையும் தூவி ஒளியினை வணங்கினர்.

<u>வினாக்கள்</u> **5**

1 . அந்தி சாயும் நேரம் என்பது _______________ .

அ) காலை நேரம் ஆ) மதிய நேரம் இ) மாலை நேரம்

2 . நெல்லையும், மலரையும் தூவி _______________ வணங்கினர்.

அ) மலையினை ஆ) ஆதவனை இ) ஒளியினை

3 . மகளிர் ____________ போன்ற தோள்களைப் பெற்றிருந்தனர்.

அ) மூங்கில் ஆ) கரும்பு இ) முத்து

4 . பூத்தட்டில் வைத்திருந்த ______________ மலர்ந்து மணம் வீசின.

அ) முல்லை மலர்கள் ஆ) சாமந்தி பூக்கள் இ) பிச்சி அரும்புகள்



StudentBounty.com
www.StudentBounty.com
Homework Help & Pastpapers

StudentBounty.com

5 . குண்டலம் என்பது ____________ .

அ) மகளிர் கால்களில் அணியும் அணிகலன்

ஆ) மகளிர் காதுகளில் அணியும் அணிகலன் இ) மகளிர் கழுத்தில் அணியும் அணிகலன்

**ஆ ) பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 5**

**1 . தன்னெஞ்சே தன்னைச் சுடும். ஏன் ?**

அ ) ஒருவர் மனம் அறிந்து பொய் கூறினால்

ஆ ) ஒருவர் மனம் அறிந்து உண்மை கூறினால்

இ ) ஒருவர் சான்றோருடன் நட்பு கொண்டால்

**2 . வேங்கை நாட்டை ஆண்டு வந்த மன்னன் யார் ?**

அ ) வேங்கை வளவன்

ஆ ) வேங்கை வேலன்

இ ) வேங்கை மார்பன்

**3 . மதிவாணன் என்னைப் பொறுத்தருள வேண்டும் என்று ஏன் கூறினான் ?**

அ ) மன்னர் ஆணையை மீறி விட்டதால்

ஆ ) அரசவைக்கு வந்த அறிஞரைக் காண வந்ததால்

இ ) தன் தந்தையை நாடு கடத்தியதால்

**4 . ஆடு மாடுகளை மேய்ப்போர், கால்நடைகளை எங்கே ஓட்டிச் சென்றனர் ?**

அ ) அரண்மனையை நோக்கி

ஆ ) தண்ணீர் உள்ள திசையை நோக்கி

இ ) மேடான இடத்தை நோக்கி

**5 . அறிஞர் கூறிய செயலைச் செய்பவர்க்கு மன்னர் அறிவித்த பரிசு யாது ?**

அ ) ஆயிரம் வெண்சங்குகள்

ஆ ) ஆயிரம் பொற்காசுகள்

இ ) ஆயிரம் வெள்ளித் தாமரைகள்

**இ) ஏதேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் தகுந்த விடை தருக. 12**

1 . திருக்குறள் - சிறு குறிப்பு வரைக.

2 . செய்ந்நன்றி அறிதல், ஒழுக்கம் உடைமை - இவை குறித்து வள்ளுவர் கூறுவன யாவை ?

3 . மடைத்தலையில் வாடி இருக்குமாம் கொக்கு - உவமை கூறும் விளக்கம் யாது ?

4 . சாம்பலில் கயறு செய்தது எப்படி ?

5 . பாரதிதாசன் குறிஞ்சி நிலத்தை எவ்வாறு வருணிக்கிறார் ?

**ஈ ) அடி பிறழாமல் எழுதுக.**

1 . சொல்லுக - எனத் தொடங்கும் திருக்குறள். **2**

2 . சினம் - என முடியும் திருக்குறள். **2**

3 . நல்லார் - எனத் தொடங்கும் மூதுரை. **4**



www.StudentBounty.com
Homework Help & Pastpapers